# பாகம் - அ
# பொதுக்கோட்பாடுகள்
# (PART - A - GENERAL PRINCIPLES)

## 1. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி
## [ORIGIN AND DEVELOPMENT OF LAW OF TORTS IN INDIA]

பாடச்சுருக்கம்: **(SYNOPSIS)**

அ. முன்னுரை

ஆ. இந்தியாவில் தீங்கியல் சட்டம்

இ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி

ஈ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தற்போதைய வளர்ச்சிகள்

உ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் மெதுவான வளர்ச்சிக்கான காரணங்கள்

### அ. முன்னுரை: (INTRODUCTION)

தீங்கு என்ற வார்த்தையானது முறுக்கப்பட்ட (நேராக அல்லாத அல்லது சட்டபூர்வமான) எனப் பொருள்படும். டார்டம் எனப்படும் லத்தீன் வார்த்தையிலிருந்து வரையறுக்கப்பட்டது.

தீங்கு என்ற வார்த்தை ஆங்கிலச் சட்டத்தில் நார்மன் சட்டவியல் வழக்கறிஞர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலில் தீங்கு என்ற வார்த்தை குறிப்பிட்ட சில தவறுகளுக்கென ஆங்கிலேய நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்டது. பின்னர் அது அனைத்து உரிமையியல் தவறுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.



மேலும் ஒருவரின் நிலத்தில் மற்றொருவர் அத்துமீறி நுழையும் தவறுகள் ஆங்கிலேய நீதிமன்றங்களில் அத்துமீறல் நீதிப்பேராணைகளுக்கு தங்களது தோற்றத்ததை அளித்தது.

ஆங்கிலேய சட்டத்தில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சிக்கான முக்கிய காரணம் என்னவென்றால் நீதிமுறை மேலாண்மை சாதாரணமானதாகவும், செலவில்லாமலும் விரைவானதாகவும் இருந்ததே ஆகும். இதனால் சட்ட உரிமைகளின் சிறிய மீறல்களுக்குக் கூட தீர்வழிகோரி ஆங்கிலேய மக்கள் நீதிமன்றங்களை நாடினர்.

### ஆ. இந்தியாவில் தீங்கியல் சட்டம்: (LAW OF TORTS IN INDIA)

இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தோற்றம் இந்தியாவில் பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் தொடர்புபடுத்தப்பட முடியும். தீங்கியல் சட்டம் முதன் முதலாக இந்தியாவில் பிரிட்டிஷ் மேயர் நீதிமன்றங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேயர் நீதிமன்றங்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினால் பட்டயச்சட்டம் 1726 -Charter Act 1726-ன் மூலம் கல்கத்தா, பம்பாய் மற்றும் மெட்ராஸ் என்ற மூன்று மாகாண நகரங்களில் ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் இந்த நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றங்களினால் இந்த மாகாண நகரங்களில் மாற்றப்பட்டது. தீங்கியல் வழக்குகளை விசாரிப்பதற்கும் உச்ச நீதிமன்றங்கள் அதிகாரவரம்பு கொண்டிருந்தது.

இந்தியாவில் ஆங்கிலேயர் சட்டத்தில் பின்பற்றப்படுவதைப் போல தீங்கியல் சட்டம் தற்போதும் இந்திய நீதிமன்றங்களால் பின்பற்றப்படுகிறது. ஆங்கிலேயரின் தீங்கியல் சட்டம் இந்திய நிலைக்கு ஏற்ப திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் தீங்கியல் சட்டத்தில் ஒரு சில இந்திய தீர்வழிச் சட்டங்கள் மட்டுமே இருப்பதாலும் இச்சட்டம் முழுவதுமாக தொகுக்கப்படாததாலும் இந்திய நீதிமன்றங்கள் தற்போதும் ஆங்கிலேயர் தீர்ப்புகளையே சார்ந்து தீர்ப்பளிக்கின்றன.

இவ்வாறு இந்தியாவில் தீங்கியல் சட்டமானது இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தின் அடிப்படையிலேயே இன்னமும் உள்ளது. தீங்கியலில் தொகுக்கப்பட்ட சட்டம் எதுவும் இல்லாததால் தீங்கியல் வழக்குகளை தீர்மானிப்பதில் இந்திய நீதிமன்றங்கள் நீதியின் விதிகள், மற்றும் நேர்மை நெறியை பயன்படுத்துகின்றன.

## இ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி: (DEVELOPMENT OF LAW OF TORTS IN INDIA)

இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி மிகவும் மெதுவானதாக இருந்தது. மேலும் இது மிகத் தாமதமாக ஆரம்பமானது. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி 17ம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குப் பிறகே ஆரம்பித்தது.

தீங்கியல் சட்டத்தின் மெதுவான வளர்ச்சிக்கு முக்கிய காரணமென்னவென்றால் இந்திய மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகள். அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் மற்றும் கிராமங்களில் வசித்து வந்தனர். முறையான கல்வியோ அல்லது தங்களது சட்ட உரிமைகள் பற்றியோ அறிவுத்திறன் எதையும் பெறாதவர்கள்.

மேலும் சட்டநீதிமன்றத்தில் தங்களது உரிமைகளை எவ்வாறு நிலைநாட்டிக்கொள்ள முடியும் என்பது குறித்து அறியாமல் இருந்தனர். இந்தியாவில் வழக்காடலுக்கான செலவு மிகவும் அதிகமாக இருந்தாலும் நீதிமன்றங்களின் மூலம் வழக்குகளை தீர்வு செய்வதில் தாமதம் இருந்ததாலும் ஏழையான வழக்காடுபவர்கள் தீர்வழிகளுக்காக நீதிமன்றங்களை மிக அரிதாகவே நாடினர்.



அதற்குப்பதில் அவ்வாறு கஷ்டப்படுவது தங்களுடைய விதி என்று சமரசம் செய்து கொண்டனர். இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் மெதுவான வளர்ச்சிக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

## ஈ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் தற்போதைய வளர்ச்சிகள்: (RECENT DEVELOPMENTS IN LAW OF TORTS IN INDIA)

1. கடந்த 50 வருடங்களில் குறிப்பாக சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் தீங்கியல் சட்டம் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. உயர்ந்த பட்ச கல்வியறிவு, செய்தித்தாள் மற்றும் மின்னணு செய்தித்துறையின் பரந்த விரிவாக்கம் தான் இதற்கு முக்கிய காரணம் என்று கூறலாம்.

   தற்போது மக்கள் தங்களது சட்ட உரிமைகள் குறித்தும் மற்றும் சட்ட நீதிமன்றங்கள் மூலம் தீர்வழிகளுக்கான வகைமுறைகள் பற்றியும் அதிகளவு அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

2. பல தீங்குச் சட்டங்கள் தொகுக்கப்பட்டது இச்சட்டத்தை மேலும் உறுதியானதாகவும் மக்களால் சுலபமாக அணுகக்கூடியதாகவும் மாற்றியுள்ளது. உதாரணமாக மோட்டார் வாகனங்கள் சட்டம் 1988 கவனமின்மைத் தீங்கில் மிகவும் பயனுள்ள சட்டமாகும்.

   பாதிக்கப்பட்டவர்கள் நஷ்டஈடு கோரி வாகன விபத்து கோருதல் தீர்ப்பாயங்களை சுலபமாக அணுக முடியும்.

   நீதிமன்றக் கட்டணம் குறைந்த அளவே ஆகும். கோருதல் தீர்வு நடைமுறை விரைவானதாகும். தவறுகை இல்லை பொறுப்பு கொள்கையின் கீழ் மோதிவிட்டு மறைந்துவிட்ட (Hit and run) வழக்குகளில் கட்டாய நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்ற வகையம் கொண்டுவரப்பட்டுள்ளது.

௩. **M.C.** மேத்தா எதிர் இந்திய அரசு (போபால் துயர சம்பவ வழக்கு) வழக்கில் 1868ம் வருடம் ரைலண்ட் எதிர் பிளெட்சர் வழக்கில் எடுத்துரைக்கப்பட்ட வரம்பற்ற பொறுப்புக் கோட்பாட்டினை உச்ச நீதிமன்றம் முன்னேற்றியுள்ளது.

ஆபத்தான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிற் நிறுவனம் தன் செயல்பாட்டின்போது ஏற்படும் விபத்தின் காரணமாக ஒருவருக்கு இன்னல் அல்லது காயம் ஏற்பட்டால் (உதாரணமாக விஷவாயு வெளியேறுதல் போன்றவை)அந்த விபத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு அத்தகைய தொழில் நிறவனம் கண்டிப்பாக மற்றும் வரம்பற்று பொறுப்பாகிறது என்று உச்சநீதிமன்றம் கூறியது.

அத்தகைய வரம்பற்ற பொறுப்பு ரைலண்ட்ஸ் எதிர் பிளெட்சர் விதியில் கூறப்பட்டுள்ள விதிவிக்குகள் எதற்கும் உட்பட்டதல்ல. என்று நீதிமன்றம் கூறியது.

மேலும் பல உரிமையியல் தவறுகளை இந்திய நாடாளுமன்றம் தொகுத்துள்ளது. உதாரணமாக இந்திய சுமையாள்கள் சட்டம் 1865, பதிப்புரிமைச் சட்டம் 1957 காப்புரிமைச் சட்டம் 1970, வணிகக் குறிகள் சட்டம் 1999, பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 போன்றவை இந்தியாவில் தீங்கியல் சட்டத்தன் வளர்ச்சி உள்ளது என்பதை காட்டும் சட்டங்கள் ஆகும்.

## உ. இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் மெதுவான வளர்ச்சிக்கான காரணங்கள்: **(REASONS FOR SLOW DEVELOPMENT OF THE LAW OF TORTS IN INDIA)**

இந்தியாவில் தீங்கியல் சட்டத்தின் மேற்குறிப்பிட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் இருந்தபோதிலும் இங்கிலாந்து மற்றும் இதர மேற்கத்திய நாடுகளில் வளர்வது போல விரைவாக இந்தியாவில் வளரவில்லை.



பின்வருபவை இதற்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

1. தீங்கியல் சட்டம் ஒரு தொகுக்கப்பட்ட சட்டம் அல்ல. அது இன்னமும் ஒரு வளரும் சட்டமாகும். இச்சட்டம் தொகுக்கப்படாததால் இதன் பல்வேறு விதிகளில் சீரான தன்மை மற்றும் உறுதித்தன்மை இல்லை.

   மேலும் தீங்கியல் சட்டத்தில் தீர்ப்புகள் சீராக இல்லை. தீங்கியல் சட்டத்தில் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் முன்தீர்ப்பு நெறிகள் இல்லை. வேறுபட்ட சூழ்நிலைகள், மாறுபட்ட வாழ்க்கை முறை போன்றவற்றால் ஆங்கிலேயச் சட்ட முன் தீர்ப்பு நெறிகள் பல இந்திய வழக்குகளில் செயல்படுத்த முடியாது.

   ஆங்கிலேயர் தீர்ப்புகள் இந்திய நாட்டு கலாச்சார சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக அல்லது இணக்கமானதாக இல்லை.

2. இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலானோர் கல்வி அறிவு இல்லாதவர்கள் மற்றும் தங்களது சட்ட உரிமைகள் பற்றி அறியாதவர்கள்.அவர்களது உரிமைகள் மீறப்படுவதற்கு தீர்வழிகள் கோருவதற்கு அவர்கள் நீதிமன்றத்தை பெரும்பாலும் அணுகுவதேயில்லை.

3. இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள் அவர்கள் சட்ட முறைகளின் மூலம் தங்களது உரிமைகளை செயல்படுத்துவதற்கென வழக்குத் தொடர ஏற்படும் அதிகபட்ச செலவை தாங்கிக்கொள்ள முடியாத அளவு ஏழைகள் ஆவார்கள்.